# பாடல் 5: உயிரே என் உயிரே (திருவிருந்து)

இயல்: கிறிஸ்து ராஜன்
இசை: இம்மானுவேல்
பாடியவர்: அனிதா பிராண்சிஸ்
இசை இயக்கம்: Fr..டெனிஸ் வாய்ஸ்

## பல்லவி

உயிரே என் உயிரே உமக்காகவே,

உள்ளம் என் உள்ளம் தினம் ஏங்குதே

உணவாக உமையேற்கும் நேரம்,

உருமாற்றம் தனைக்காணும் உளக் கோவிலே

என் தேவன் ஒரு வார்த்தை நீர் கூறுமே,

என் ஆன்மா நலமாகுமே. வா........

## சரணம் 1

வெண்மை நிற அப்பம் உடலானதே,

உண்மை பல சொல்லும் உணவானதே

பிறர் வாழ பலியான எம் தேவனே,

மலர்தூவி உமைப் போற்றும் எம் பாடலே

பகிர்ந்தாலே எம் வாழ்வு உயர்வாகுமே - அதை

உணர்ந்தாலே எம் ஜீவன் உயர்வாகுமே. வா......

## சரணம் 2

கிண்ணம் தரும் எண்ணம் உம் நினைவானதே

திண்ணம் அது என்றும் நிலையானதே

உயிர் காக்கும் மருந்தாகும் எம் தேவனே

துயர் நீங்கி உனில் வாழும் எம் ஜீவனே

மனம் மாற உம் வாழ்வு துணையாகுமே - அதன்

மகிழ்வாக உம் வேதம் எமதாகுமே. வா......

This song is prepared for Iniya Ithayangal whatsapp group and linked in www.manavai.com